ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 24.03.2015 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2015 சனவரி

### பொதுநோக்கு

**இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2015 சனவரியில் உறுதியாகக் காணப்பட்டது.** வர்த்தகப் பற்றாக்குறையில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு அதேபோன்று நிதியியல் கணக்கு என்பனவற்றிற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டுத் துறையின் மீளெழுச்சிக்குப் பங்களித்தன. இறக்குமதிச் செலவினத்தில் எதிர்பார்க்கப்படும் குறைப்பு, சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் பேரிலான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் அதேபோன்று அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் ஏனைய தனியார் துறை என்பனவற்றிற்கான பெறுகைகள் என்பன காரணமாக வெளிநாட்டுத் துறை இவ்வாண்டு காலப்பகுதியில் மேலும் வலுவடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

**கைத்தொழில் ஏற்றுமதிகளை முக்கியமாகக் கொண்ட ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015 சனவரியில் ஐ.அ.டொலர் 910 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை பதிவு செய்தன.** மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 77 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் அதனைத் தொடர்ந்து பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள், தோல் மற்றும் பயணப் பொருட்கள் மற்றும் காலணி என்பனவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். 2015 சனவரியில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 56 மில்லியனுக்கு 67.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு விலைகளில் குறைப்புக் காணப்பட்டமைக்கிடையிலும் நீர்க்கல மற்றும் வான் போக்குவரத்து எரிபொருட்களின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. 2015 சனவரியில் பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 27 மில்லியனுக்கு 15.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு மின்னியல் பொறித்தொகுதி மற்றும் சாதனங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக இருந்தவேளையில், தோல் பயணப் பொருட்கள் மற்றும்

காலணிகளின் ஏற்றுமதிகள் 70.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 15 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு காலணியில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பே காரணமாகும். எனினும், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 21 மில்லியனுக்கு 44.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 64 மில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இறப்பர் ரயர்களின் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். எனினும், சத்திரசிகிச்சைக்கும் மற்றையவற்றிற்குமுரிய கையுறைகளின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. அதேவேளை, புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 410 மில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தன.

அதேவேளை, வேளாண்மைத் துறையிலிருந்தான வருவாய்கள் 0.6 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த பன்னாட்டு பண்ட விலைகளே காரணமாகும். தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் பெறுமதி நியதிகளில் 2.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு அளவு 11.9 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் விலைகள் குறைவாக இருந்தமையே காரணமாக அமைந்தது. 2013 யூலையிலிருந்து வரவேற்கத்தக்க வளர்ச்சியொன்றைக் காட்டிய தெங்கு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 2015 சனவரியில் வீழ்ச்சியடைந்தமைக்கு தெங்கு உள்ளீடு அல்லா உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். மேலும், கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015 சனவரியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. எனினும், வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் 73.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கறுவா மற்றும் மிளகு என்பனவற்றை உள்ளடக்கிய குறிப்பிட்ட வகைகளின் விலை மற்றும் அளவு இரண்டும் அதிகரித்தமையே காரணமாக இருந்தவேளையில் சிறு வேளாண்மை உற்பத்திகளும் 2014 இன் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன.

**அட்டவணை 1 – ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்**

| வகை | சன. 2014 (ஐ.அ.டொ மில்.) | சன. 2015 (ஐ.அ.டொ மில்.) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **697.5** | **703.8** | **0.9** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 412.0 | 409.9 | -0.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 73.2 | 64.2 | -12.3 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 44.5 | 43.2 | -2.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.0 | 6.7 | -5.5 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 23.6 | 27.2 | 15.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 33.2 | 55.5 | 67.3 |
| உணவு குடிவகைகள் மற்றும் புகையிலை | 38.1 | 21.2 | -44.4 |
| ஏனையவை | 66.0 | 75.9 | 15.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **203.2** | **202.0** | **-0.6** |
| தேயிலை | 116.1 | 113.5 | -2.2 |
| தேங்காய் | 22.5 | 19.2 | -14.7 |
| கடலுணவு | 21.7 | 16.6 | -23.8 |
| வாசனைத்திரவியம் | 17.9 | 31.1 | 73.8 |
| ஏனையவை | 24.9 | 21.6 | -13.4 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.2** | **4.0** | **25.0** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **903.9** | **909.8** | **0.6** |

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**இறக்குமதிச் செயலாற்றம்**


**2015 சனவரியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,682 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 1.6 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்து நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்தமையைப் பிரதிபலித்தன.** இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பு நுகர்வுப் பொருட்களிலிருந்து கிடைத்த வேளையில் அதற்கு அரிசி, தனியாள் உந்து ஊர்திகள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2014 ஏப்பிறலிலிருந்து அவதானிக்கப்பட்ட அதிகரிக்கின்ற போக்கின் தொடர்ச்சியாக அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் 2014இன் தொடர்பான மாதத்தின் ஐ.அ.டொலர் 1.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 சனவரியில் ஐ.அ.டொலர் 55 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு தாழ்ந்த உள்நாட்டு உற்பத்திகளே காரணமாக அமைந்தன. அதேவேளை, தனிப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் 115.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளுக்கான இறக்குமதித் தீர்வை அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் அதேபோன்று யப்பானிய யென்னின் தேய்மானமும் காரணங்களாக அமைந்தன. முதலீட்டுப் பொருட்களின் அதிகரிப்பிற்கு பேருந்துகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பின் காரணமாக போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதிகள் அதிகரித்தமையே காரணமாகும். பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு பொறியியல் சாதனங்களின் இறக்குமதிகளிலிருந்தான உயர்ந்த பங்களிப்பே காரணமாகும். அதேவேளை, இடைநிலைப்பொருட்கள் 18.7 சதவீதத்தினால்


வீழ்ச்சியடைந்தமைக்கு எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 41.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் ஆகிய இரண்டினதும் குறைந்த விலைகளும் குறைந்த அளவுகளினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். கோதுமை, சோளம் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் மீதான குறைந்த செலவினமும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தன. எனினும், வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியமைக்கு விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்ட போதும் அளவுகள் கணிசமாக அதிகரித்தமையே காரணமாகும். அடிப்படை உலோகங்கள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மீதான செலவினம் கணிசமானளவிற்கு அதிகரித்தது.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம்**

| வகை | சன. 2014 (ஐ.அ.டொ மில்.) | சன. 2015 (ஐ.அ.டொ மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **253.6** | **397.3** | **56.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 109.9 | 169.5 | 54.3 |
| அரிசி | 1.6 | 55.0 | 3,418.1 |
| பால் உற்பத்திகள் | 38.2 | 14.5 | -62.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிவகைகள் | 70.1 | 100.1 | 42.8 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 143.7 | 227.8 | 58.5 |
| வாகனங்கள் | 46.1 | 99.5 | 115.8 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல்கள் | 32.2 | 36.6 | 13.8 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 65.4 | 91.7 | 40.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,034.8** | **835.7** | **-19.2** |
| எரிபொருள் | 491.2 | 283.3 | -42.3 |
| புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 193.6 | 200.0 | 3.3 |
| இரசாயன உற்பத்திகள் | 68.5 | 74.5 | 8.8 |
| பிளாத்திக்கு மற்றும் தொடர்பானவை | 51.8 | 50.8 | -2.0 |
| அடிப்படை உலோகங்கள் | 32.4 | 49.5 | 52.8 |
| கடதாசி மற்றும் கடதாசிப்பலகை மற்றும் தொடர்பான பொருட்கள் | 35.7 | 38.4 | 7.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 39.8 | 21.3 | -46.5 |
| வளமாக்கி | 3.5 | 10.1 | 188.3 |
| ஏனையவை | 118.3 | 107.9 | -8.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **366.3** | **441.8** | **20.6** |
| பொறி மற்றும் இயந்திரம் | 196.9 | 240.6 | 22.2 |
| கட்டடப் பொருட்கள் | 121.9 | 109.1 | -10.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 47.2 | 91.1 | 93.2 |
| ஏனையவை | 0.3 | 1.0 | 257.1 |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,655.5** | **1,675.7** | **1.2** |

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி



**வர்த்தக நிலுவை**

2015 சனவரியில் வர்த்தகப் பற்றாக்குறை 2014 சனவரியின் ஐ.அ.டொலர் 752 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 772 மில்லியனுக்கு விரிவடைந்தது.

**சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்**

**2015 சனவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2014 சனவரியின் 146,575 இலிருந்து 156,246 இற்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.6 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** இந்தியா, ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி மற்றும் ருஷியா என்பன சுற்றுலாப் பயணிகளின் ஐந்து முக்கிய மூலங்களாக விளங்கி 2015 சனவரியின் மொத்த வருகைகளில் 43.3 சதவீதத்திற்கு வகைகூறின. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்[1] 2014 சனவரியின் ஐ.அ.டொலர் 233.3 மில்லியனிலிருந்து 2015 சனவரியில் ஐ.அ.டொலர் 248.7 மில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

**2015 சனவரியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 523.5 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 555.5 மில்லியனிலிருந்து 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** இவ்வீழ்ச்சி, 2014 திசெம்பரில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 708.8 மில்லியன் கொண்ட மிக உயர்ந்த சாதனைப் பாய்ச்சல்களுக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனினும், தொழிலாளர் பணவனுப்பல்கள் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

**2015 சனவரியில் அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நீண்டகாலக் கடன்கள் 2014இன் தொடர்பான கலப்பகுதியின் ஐ.அ.டொலர் 112.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 57.7 மில[1]லியனாகக் காணப்பட்டன.** அதேவேளை, அரச பிணையங்கள் ச[2]ந்தையில் அரசின் முதலீடுகள் 2015 மாச்சு 13ஆம் நாளிலுள்ளவாறு தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 12.8 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவு செய்தது. மேலும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள இரண்டாந்தரச் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள் 2015 மாச்சு 13ஆம் நாளளவில் ஐ.அ.டொலர் 19.6 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2015 சனவரியில் சென்மதி நிலுவை 2014இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 732.9 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 696.5 மில்லியன் பற்றாக்குறையினை பதிவு செய்யுமென மதிப்பிடப்பட்டது.

---

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின், சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2015ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீடு பெருமளவிற்கு தற்காலிகமானவையாகவும் திருத்தப்படக் கூடியனவாகவுமிருக்கும்.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

**வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் பேரிலான ஐ.அ.டொலர் 930 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் (ப.நா.நிதியம் - துணைநில் ஒழுங்கு கொடுப்பனவுகள் மற்றும் நாட்டிற்கான முறிகளின் தீர்ப்பனவிற்கான பகுதியளவிலான பங்களிப்புக்கள் உட்பட) இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2015 பெப்புருவரி இறுதியில் ஐ.அ.டொலர் 7.4 பில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.5 மாத இறக்குமதிகளுக்கு சமனானதாக இருந்தது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2015 சனவரி இறுதியில் ஐ.அ.டொலர் 8.9 பில்லியனாக விளங்கி 5.5 மாத இறக்குமதிகளுக்கு சமனானதாக விளங்கியது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2014 இறுதியின் மட்டமான ஐ.அ.டொலர் 8.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்திருப்பதனால், நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை உயர்ந்த மட்டத்தில் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல், இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியனாகக் காணப்பட்ட பரஸ்பர பரிமாற்றல்களிலிருந்தான பெறுகைகளின் நிலுவை மற்றும் ஏனைய கிரமமான மூலதன உட்பாய்ச்சல்கள் என்பன இம்முன்னெடுப்புக்களில் சிலவாக இருந்ததுடன் இவை அடுத்த சில மாத காலப்பகுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை உயர்ந்த மட்டத்திற்கு மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

**செலாவணி வீத நடத்தை**

**இவ்வாண்டு மாச்சு 13 வரையிலான இவ்வாண்டு காலப்பகுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 1.39 சதவீதத்தினால் தேய்வடைந்தவிடத்து செலாவணி வீத உறுதிப்பாடு, நடைமுறையிலுள்ள கொள்கைக்கேற்றவாறு உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வழமையான தலையீடுகளினூடாக பேணப்பட்டது.** எனினும், குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளில் இலங்கை ரூபா யூரோவிற்கெதிராக 13.1 சதவீதத்தினாலும் ஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 3.2 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னிற்கெதிராக 0.3 சதவீதத்தினலும் கனேடிய டொலருக்கெதிராக 8.2 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலிய டொலருக்கெதிரா 5.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் இக்காலப்பகுதியில் இந்திய ரூபாவிற்கெதிராக 2.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

### அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு[(அ)]

| வகை | சன. 2014 ஐ.அ.டொ. மில். | சன. 2015 ஐ.அ. டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 903.9 | 909.8 | 0.6 |
| இறக்குமதிகள் | 1,655.5 | 1,681.6 | 1.6 |
| வர்த்தக மீதி (மிகை (+)/ குறை (-)) | -751.5 | -771.9 | 2.7 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 233.3 (ஆ) | 248.7 | 6.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 555.5 | 523.5 | -5.8 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (இ) | 12.2 | 0.9 | -92.6 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (ஈ) | 1,375.1 | 147.6 | -89.3 |
| *இதில்,* | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 260.5 | 81.2 | -68.8 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,000.0 | - | - |
| நீண்ட காலக் கடன்கள் | 112.2 | 57.7 | -48.6 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.